வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

WC

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | சித்திரக்கலை- I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- ➢ ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

The National e-learning portal for The General Education


### பகுதி - I

- **வினா இல 01 - 05 வரை கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக. செய்க.**


A


B


C


D


E

01) எழுத்து *A* இன் மூலம் காட்டியுள்ள இராணி மாளிகை எனவும் அறியப்படும் மகாசென் மாளிகையின் சந்திரவட்டக்கல்
   (1) சிறுபுடைப்புச் செதுக்கல்களில் ஒன்று
   (2) பிராணிகளின் உருவங்கள் உள்ளடக்கி செதுக்கப்பட்ட செதுக்கல்
   (3) சலனம், ரிதம், மென்மையான பூரணப்பாட்டைக் கொண்ட செதுக்கல்
   (4) அரைவட்டக் கருங்கல் தகட்டுச் செதுக்கல்
   (5) கற்சிற்பியின் சிறப்பான நிர்மாணிப்பு
   ( .......)

02) *B* எழுத்தால் காட்டப்படும் பெண் செதுக்கல்
   (1) பாரூத் கல்வேலித் தூணில் உள்ள இயக்கி வடிவம்
   (2) அமராவதி கல்வேலித் தூணிலுள்ள இராட்சசி வடிவம்
   (3) சாஞ்சி தோரணத்திலுள்ள இயக்கியின் வடிவம்
   (4) சாலபஞ்சிகா என்னும் பெயரால் இனங்காணப்படும் இயக்கியின் வடிவம்
   (5) சகல சௌபாக்கியங்களையும் குறியீடாகக் கொண்ட தேவதையின் வடிவம் ( .......)

03) $C$ எழுத்தால் காட்டப்படும் படக்குறிப்பில் சித்தரிக்கப்படுவது
(1) புதிய எகிப்திய மரபுக்கமைய செதுக்கப்பட்ட சிற்பம்
(2) பேரோ ஒருவரை வெளிக்காட்டுகின்ற மரபுரீதியான சிற்பம்
(3) கப்ரே என்னும் பெயரில் இனங்காணப்படும் சிற்பம்
(4) கெசிறா என்னும் பெயரால் இனங்காணப்படும் சிற்பம்
(5) பூஜைக்கு ஆயத்தமாகும் பாரர் ஒருவரைக் காட்டும் சிற்பம் (.......)

04) எழுத்து $D$ இனால் காட்டப்படும் ரஜன் தூண் செதுக்கல்
(1) உரோமில் இருந்த செதுக்கல் கலை பற்றி செய்கின்ற விவரணம்.
(2) குறுக்கு நிரைகள் வேறுவேறாகப் பிரித்து நிர்மாணிக்கப்பட்ட செதுக்கல் தொகுதிகளின் இணைப்பு.
(3) மாகஸ் ஒறுளியல் தூண்போல் நிர்மாணிக்கப்பட்டது.
(4) சக்கரவர்த்தியின் யுத்த வெற்றிச் செய்திகளை உள்ளடக்கிச் செய்யப்பட்டது.
(5) அரச பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கிச் செய்யப்பட்டது. (.......)

05) $E$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரதத்தின் காந்தார தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை
(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.
(2) துஸ்தரக்கிரியாவ புத்தசிலையாகும்.
(3) சஹ்ரி பகலொல் புத்தர் சிலையாகும்.
(4) பிரெகம் புத்தர் சிலையாகும்.
(6) கிரேக்க கிறிஸ்துதேவ புத்தர் சிலையாகும். (.......)

- **6 தொடக்கம் *10* வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க**

*06)* பாரத்தின் சாராநாத் குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி சிறந்த புத்தர் சிலையினால்,
*1)* குப்தர் காலத்திற்குரிய மரபு ரீதியான பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
*2)* புத்த பகவான் மிகதாயில் முதலாவது தர்ம உபதேசத்தினைச் செய்த சந்தர்ப்பம் வெளிப்படுத்தப்படுகின்றது.
*3)* புத்தபகவானின் முப்பத்திரண்டு விசேட பண்புகள் தெளிவாகவெளிப்படுத்தப்படுகின்றன.
*4)* சாராநாத் குருகுலத்தில் உருவான புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
*5)* புத்தபெருமானது சுயபுலனடக்கத்தை (துஸ்தரன் சிகிரியாவை) வெளிப்படுத்தப்படுகின்றது. (..........)

*07)* ஹென்றிமூவரின் ,,அரச குடும்பம்' என்ற சிலை,
*1)* இயற்கையானதும் யதார்த்தமானதுமான வடிவங்கள் சமநிலையில் பயன்படுத்தித் தொகுக்கப்பட்ட சோடிச் சிலையாகும்
*2)* கலைஞர் தனக்கே உரித்தான வடிவங்களைப் பயன்படுத்தி செய்த அரூப வடிவங்களின் நிர்மாணிப்பாகும்
*3)* மனித பரிமாணங்களை உருத்திரிபு செய்து நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்
*4)* இயற்கையான வடிவங்கள் தாவரவியல் சிலை ஒன்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகும்
*5)* மறுமலர்ச்சிக்கால சிற்புப் பண்புகளை கொண்ட பிரமாண்டமான சிற்பமாகும் (..........)

*08)* இசுருமுனியின் இயற்கைக் கற்பாறையில் செதுக்கி உள்ள யானைகள் நீரில் விளையாடும் விதத்தைக் காட்டும் செதுக்கலில்
*1)* சோழ கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
*2)* குப்த கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
*3)* பல்லவர் கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
*4)* பாண்டியர் கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
*5)* விஜயநகர நாயக்கர் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன (..........)

*09)* சந்திரவட்டக்கல் சிற்பம் இலங்கையின் கலை நிர்மாணிப்புகளுள் பெறுமதி வாய்ந்த ஒரு நிர்மாணிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்குக் காரணம்
*1)* வழிபாட்டுத் தலம் ஒன்றினுள் நுழைகின்ற வாயிலில் அமைந்துள்ளமை ஆகும்.
*2)* உள்நாட்டுக் கலைஞரின் பேராற்றலை எடுத்துக்காட்டும் பெறுமதி வாய்ந்த நிர்மாணிப்பு என்பதனால் ஆகும்
*3)* லௌகீகப் பிணைப்புக்களிலிருந்து விடுபடுதலை வெளிப்படுத்துவதற்காக நிர்மானிக்கப்பட்டுள்ளமை ஆகும்
*4)* கருங்கல் ஊடகத்தினால் சிறுபுடைப்பு நுட்பத்தில் வெளிப்பட்டுத் தெரியும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் ஆகும்
*5)* காலத்திற்கு காலம் அவை மாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை ஆகும் (..........)

10) அபயகிரி தூபி வரலாற்று ரீதியாக முக்கியத்தும் பெறக் காரணம்
1) அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான மூன்று தூபிகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றமை ஆகும்
2) எட்டு வழிபாட்டுத் தலங்களுக்குரிய (அட்டமஸ்த்தான) தூபிகளுள் பெரிய தூபி என்பதனால் ஆகும்
3) ,,கிரி' என்ற சமணத்துறவியின் (கிரி நிகண்டயா) ஆராமை இருந்த இடத்தில் வலகம்பா மன்னனால் கட்டப்பட்மையினால் ஆகும்
4) நுழைவாயிலில் சங்கநிதி, பதுமநிதி பைரவ உருவங்கள் அமையப் பெற்றுள்ளமையினால் ஆகும்
5) இந்தியாவில் அமராவதி தூபி சாயலில் கட்டப்பட்டமையாகும் (..........)

❖ **வினா இல 11 - 15 வரை கீழே தரப்படும் $P, Q, R, S, T$ எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**


P


Q


R


S


T

11) P இனால் காட்டப்பட்டுள்ள ஆக்கம்
(1) கோகுல் குகையில் வரையப்பட்டுள்ள எருதின் ஓவியம்
(2) லஸ்கோ குகையில் வரையப்பட்ட இறந்த மனிதனின் பராமரிப்பு ஓவியம்
(3) அல்ராமீராக் குகையில் வரையப்பட்ட மாட்டின் ஓவியம்
(4) யானையின் ஓவியம்
(5) பொன்டிடுகோமோ குகையில் வரையப்பட்ட யானை ஓவியம் (.......)

12) Q என்ற எழுத்தில் காட்டப்பட்டுள்ள ஓவியம்
(1) அருபவாதியான ஜக்சன் பொலக்கின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(2) அருபவாதியான வஸ்லி கன்திஸ்கியின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(3) கனவடிவவாதியான பிராக்கின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(4) கனவடிவவாதியான பிக்காசோவின் ஆக்கங்களில் ஒன்றாகும்
(5) அருபவாதியான பியே மொன்றியனின் ஆக்கங்களில் ஒன்றாகும்

13) R இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
(1) பிக்காசோவால் வரையப்பட்டது.
(2) அமிர்தா சேக்கிலால் வரையப்பட்டது.
(3) ஜெமினிராயால் வரையப்பட்டது.
(4) ஸ்ரானலி அபயசிங்கால் வரையப்பட்டது.
(5) ஜோர்ஜ் பிராக்கால் வரையப்பட்டது. (.......)

14) S இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
(1) சிகிரியா ஓவியங்களில் ஒன்று
(2) மிகிந்தலை வாகல்கட ஓவியங்களில் ஒன்று
(3) மகியங்கனை ஓவியங்களில் ஒன்று
(4) திவங்கசிலைமனை ஓவியங்களில் ஒன்று
(5) தம்புள்ள விகாரை ஓவியங்களில் ஒன்று (.......)

15) T இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
(1) மொகலாய கலை மரபில் அமைந்த முந்தாச்மகாலாகும்
(2) அக்பர்நாம எனும் நூல் அலங்கரிப்பாகும்
(3) அபிந்திரநாத்தாகூரின் ஓவியமாகிய கிராமிய பெண்ணாகும்.
(4) இராஜபுத்தானிய கலை மரபில் அமைந்த ராதையின் வடிவமாகும்
(6) பெண் பிள்ளைகள் என்ற அமிர்தா சேக்கிலின் ஓவியமாகும் (.........)

- ***16 தொடக்கம் 20 வரையான ஓவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க***

16) கண்டிக் கால ஓவியக்கலை மலைநாடு, தமிழ்நாடு என வேறுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் தாழ்நாட்டு ஓவியங்கள் காணக்கூடிய இரு இடங்கள்
   1) தம்புல்ல லென் விகாரையும், ரிதி விகாரையும்
   2) கதலுவ விகாரையும், மதவல விகாரையும்
   3) கதலுவ விகாரையும், தெல்வத்த விகாரையும்
   4) கரகம்பிட்டிய விகாரையும், ரிதி விகாரையும்
   5) தெகல்தொறுவ விகாரையும், தலதாமாளிகையும் (..........)

17) நடனக் கலையில் மதிப்புமிக்க நடனமான கோலாட்ட நடனத்தைச் சித்திரிக்கும் பெறுமதிமிக்க செதுக்கல் காணப்படுவது
   1) கடலாதெனிய விகாரையின் அடித்தளத்தில்
   2) யாப்பகுவ கற்சுவரில்
   3) எம்பக்க தேவாலய மரச்செதுக்கலில்
   4) இலங்காதிலக விகாரையின் வெளிப்புறச் சுவரின் மணியுருக்கட்டு (பொரதம்) நிரைகளுக்கிடையில்
   5) பொலநறுவை வைஜந்தி மாளிகை அடித்தளத்தில் (..........)

18) பாறையை வெட்டி பிளந்து முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட எல்லோராவில் காணப்படும் வழிபாட்டு இடம்
   1) தீன்தாள் குகை 2) தோதாள் குகை 3) கைலாசநாதர் கோயில் 4) துர்மலேனா கோயில்
   5) இந்திரசபா கோயில் (..........)

19) பொலன்னறுவைப் புத்தர் சிலைகளில் காணக்கூடிய விசேட இயல்பு
   1) நெளிவரி மடிப்புகள் 2) நீரலை மடிப்புகள்
   3) சோடியான இரேகை மடிப்புகள் 4) மடிப்புகளின்மை
   5) வரிவடிவ மடிப்புக்கள் (..........)

20) கண்டி யுகத்திற்குரிய தெகல்தொருவ விகாரையில் உள்ள யமனை வெற்றி கொள்ளல் எனப் பெயர் பெறும் ஓவியத்தின் விசேட அம்சம்
   1) பூமித்தாயின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
   2) யமனின் புத்திரர்கள் உருவம் காட்டப்பட்டிருத்தல்
   3) வாளைக் கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
   4) துப்பாக்கியை கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
   5) ஐந்து தலையுடன் யமன் காட்டப்பட்டிருத்தல் (..........)

- ***21 தொடக்கம் 25 வரையான ஓவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னே தரப்படும் கலைப்படைப்பை அடப்படையாக கொண்டு தெரிவு செய்க***

21) 19 ஆம் நூற்றாண்டில் இறுதியில் பிரபல்யம் பெற்ற பாணிக்கமைய இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது. இது வெளிப்படுத்தும் பாணி
   1) இம்பிரிசம் 2) போஸ்ட் இம்பிரிசம்
   3) கியூபிசம் 4) போவிசம்
   5) சர்ரிலிசம்



(……)

22) இங்கு காட்டப்பட்டுள்ள இந்துக் கோயில்
   (1) 13ம் நூற்றாண்டில் பாண்டிய கட்டடக்கலை இயல்புகளுக்கமைய கட்டப்பட்டதாகும்.
   (2) 11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.
   (3) வானவன்மாதேவி என்ற அரசியால் பொலன்னறு வையில் கட்டப்பட்டதாகும்.
   (4) சோழர்களின் கட்டடக்கலை இயல்புகளுக்கமைய 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.
   (5) கலிங்கமாகனால் கட்டப்பட்ட இந்துக் கோயிலாகும். (……)



23) இச்சிலை காணப்படுவது



(1) பொலன்னறுவை அலாகன பரிவெனா வளவினுள் காணப்படுகின்ற சிலையாகும்.
(2) பொலன்னறுவை கல்விகாரையின் சமாதி புத்தர் சிலையாகும்.
(3) பொலன்னறுவை பபலு விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தர் சிலையாகும்.
(4) பொலன்னறுவை வட்டதாகேயில் காணப்படுகின்ற புத்தர் சிலையாகும்.
(5) பொலன்னறுவை லங்காதிலகவுக்கு அண்மையில் காணக்கூடியதான சிலையாகும்.

( .......)

24) இங்கு காட்டப்பட்டுள்ள வில் வளைவு



(1) உரோமர்கள் தமது கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக மேற் கொண்ட நிர்மாணிப்பாகும்.
(2) உரோம சிற்பக்கலையின் பெருமையை எடுத்துக் காட்டுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட வில் வளைவாகும்.
(3) உரோமப் பேரரசனொருவனின் யுத்த வெற்றிக் குறிப்புகளை உள்ளடக்கிய செதுக்கல்களைக் கொண்ட வீதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்ட வில் வளைவாகும்.
(4) உரோமாபுரியில் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குச் செல்வதற்கான நுழைவாயிலாகக் கட்டப்பட்டதாகும்.
(5) உரோமப் பேரரசர்களால் தமது நகரங்களை அலங்கரிப்பதற்காகக் கட்டப்பட்டதாகும். ( .......)

25) அருகில் காட்டப்படுவது



(1) எகிப்தில் தீபஸ்சிஸ் காணப்படும் எட்பூ தேவஸ்தானம்
(2) விசாலமான தூண்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட ஒரேயொரு தேவஸ்தானம்
(3) சூரிய தெய்வத்திற்குக் கட்டப்பட்ட லக்சோ தேவாலயம்
(4) ராம்சேஸ் அரசனுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்
(5) ஹோரஸ் தெய்வத்தின் பொருட்டு கட்டப்பட்ட தேவாலயம்

(……)

- ***26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க***

26) பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தி சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த நடனக்காரன் வடிவமைக்கப்பட்டுள்ளது?
1) கருங்கல் 2) மரமும் கருங்கல்லும் 3) செம்மணற்கல்
4) செங்கல் 5) சாம்பல் நிறக்கல் (..........)

27) மனித உருவத்தைப் படைப்பதில் கிரேக்க சிற்பிகளின் பிரதான கருத்தாக இருந்தது
1) முகத்தின் பக்கப்பார்வையையும் கண்களின் முன்பக்கத் தோற்றத்தையும் காண்பித்தல்
2) பலத்தையும் வெற்றியையும் வெளிப்படுத்தல்
3) திரிபடைந்த வடிவங்களைப் பயன்படுத்துதல்
4) இலட்சியமான மனிதர் - அழகினையும் தேகபலத்தையும் காணப்பித்தல்
5) கைகளைப் பொத்தியவாறு விறைப்பான தன்மையுடையதாகக் காண்பித்தல் (..........)

28) எகிப்திய ஓவியத்தின் ஒரு முனைப்பான சிறப்பியல்பு
1) தூரதரிசன தத்துவங்களை அனுசரித்தல்
2) முப்பரிமான பாங்கில் நிழற்றுதல்
3) கோடுகள்சார் வரைவிலக்கணம்
4) ஒருங்கமைவைப் புறக்கணித்தல்
5) நேராக பார்த்த விதத்தில் முக அமைப்பைக் காட்டுதல் (..........)

29) இலங்கையின் புராதன அரச மரத்தைச் சுற்றிய மண்டப (போதிகர) ங்களுள் இதுவரை காலமும் பேணிப் பாதுகாக்கப்பட்ட அமைப்பைக் கொண்டிருப்பது
1) நில்லக்கம 2) மகாமேவ வனம் 3) யாப்பகூவா
4) சிகிரி உத்தியானம் 5) களனி மகாபோதி (..........)

30) சாஞ்சி தூபியின் (ஹர்மிகா' இற்குப் பதிலாக இலங்கைத் தூபிகளில் சேர்க்கப்பட்ட அமைப்பு
1) பேசாவளலு 2) கொத்ஹறல்லா 3) சதுரக்கோட்டம்
4) தேவகோட்டம் 5) கர்பய (அண்டம்) (..........)

- **வினா இலக்கம் *11 - 15* வரை கீழே தரப்படும் F, G, H, I, J என்ற நிழற்படங்கள் தொடர்பான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**



**F**



**G**



**H**



**I**



**J**

*31)* கண்டிய சுவரோவிய மரபில் இருந்து சற்று வேறுபட்ட தன்மையிலான சித்திரங்களை காட்டும் ஓவியப் பகுதி

*1)* F *2)* G *3)* H
*4)* I *5)* J ( ........)

*32)* ஹென்ரிமூரினால் நிர்மாணிக்கப்பட்ட படைப்பு

*1)* G *2)* F *3)* I
*4)* H *5)* J ( ........)

*33)* குப்தர் காலத்து படைப்புக்களில் பகுதியாக கருதக்கூடிய படைப்பு

*1)* J *2)* I *3)* H
*4)* G *5)* F ( ........)

*34)* வெண்கல ஊடகத்தில் ஆக்கப்பட்ட சோழர் காலப் படைப்பு


*1)* I *2)* H *3)* G
*4)* F *5)* J ( ........)

*35)* காந்தார படைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படக் கூடியது.

*1)* H *2)* I *3)* J
*4)* F *5)* G ( ........)

e-learning Portal for The General Education

- ***36 - 40* வரை** கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் **வினாக்களிற்குரிய பொருத்தமான** விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.



*36)* இச் சித்திரத்தின் மூலம் கலைஞர் வெளிப்படுத்த முற்பட்ட விடயம்

*(1)* சந்திர காந்தக்கல்
*(2)* மலர் மணம்
*(3)* வெண்முகில்
*(4)* சந்திரோதயம்
*(5)* ஒரு மலரின் மணம்

( ..........)‘

37) இச்சித்திரத்தின் படைப்பாளி
1) ஜவன்பீரிஸ்
2) கருணாரத்ன
3) தரணியாகல
4) ஹரிப்பீரில்
5) மஞ்சுசிரி

(……)

38) இச்சித்திரத்தில் காணப்படும் வடிவங்கள்,
1) யதார்த்த தன்மையாக உயிரோட்டமிக்கதாக காணப்படல்
2) அரூப நிலையான (Abstract) வெளிப்பாட்டு கலைப்பாணி இயல்புகள் காணப்படல்
3) றோமாண்டிக் வாதமுறையில் காட்டப்பட்டிருத்தல்
4) கனவடிவ வாதமுறையில் காட்டப்பட்டிருத்தல்
5) கனவடிவ வாத பண்புகளையும் தமக்கேயுரிய பண்புகளையும் கலந்து காட்டியிருத்தல்

(..........)

39) இவ்வோவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது
1) வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன வர்ணம், இரேகைகள், தள வடிவங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
2) வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன யதார்த்தமாக காட்டப்பட்டுள்ளது.
3) வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன ஒளியல் வாத பண்புகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
4) வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன கண்டிய ஓவிய மரபின் மூலம் காட்டப்பட்டுள்ளது.
5) வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன பிரகாசமான வர்ணங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.

(..........)

40) இச்சித்திரம் பூர்த்தியாக்கப்பட்டுள்ள ஊடகம்
1) பஸ்ரல் வர்ணம் 2) எண்ணெய் வர்ணம் 3) நீர் வர்ணம்
4) தூள் வர்ணம் 5) இயற்கை வர்ணம்

(..........)

The National e-learning Portal for The General Education

## பகுதிII
## உப பகுதி ‘அ’
## (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. இலங்கையில் கட்டட சிற்பக் கலைக்குப் புதிய மரபொன்றைச் சேர்த்துள்ள எம்பக்க தேவாலய த்திலான செதுக்கிய மரச்சிலைகள் அவற்றை ஆக்கிய கலைஞர்களின் தேர்ச்சித்திறனை காட்டும் மிகச்சிறந்த கலைப்படைப்புகளாகும்.

   1) எம்பக்க ஆலயத்தில் சில செதுக்கிய மரச்சிலைகள் மக்கள் வாழ்கையைச் சித்தரிப்பனவாகும். ஆத்தகைய மரச்செதுக்கல் வேலைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   2) எம்பக்கே ஆலயத்தின் மரத்தாலான கட்டடக் கலை அமைப்புப் பற்றிச் சுருக்கமான விவரணம் தருக
   3) இம்மரச் செதுக்கல் வேலைப்பாடுகளிற் காணத்தக்க குறிப்பான சிறப்பியல்புகளையும் தொழில்நுணுக்கங்களையும் மதிப்பிடுக.

2- 18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஓவியக்கலைப் பாரம்பரியம் அப்பிரதேசத்திற்கு மட்டும் வரையறுக்கப்படாது தாழ்நிலப் பிரதேசங்களுக்கும் பரவியபோது அப்பாணி சிறு மாற்றங்களுக்கு உள்ளானது.

   1) மலையக சித்திரங்களில் காணக்கூடிய தாவர வடிவங்கள் நான்கு தருக?
   2) இக்காலத்தில் மலைநாட்டு (உடரட்ட) சித்திர பாரம்பரியம் தாழ்நாட்டு பாரம்பரியத்திலிருந்து வேறுபடும் முறையைச் சுருக்கமாக விவரிக்க.
   3) கரகம்பிட்டிய ஆலயத்தில் வரையப்பட்டுள்ள மாரனின் புதல்விகள் என்ற ஓவியம் பற்றி மதிப்பீடு ஒன்றை எழுதுக.

The National e-learning Portal for The General Education

## உப பகுதி ‘ஆ’
## (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

3- புராதன இந்தியாவின் சிற்ப ஓவிய செதுக்கல் திறனை எடுத்துக்காட்டுவதாக அஜந்தா குகைகள் அமைகின்றன.

   1)அஜந்தா ஓவியங்களின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
   2)அஜந்தா குகைகளின் வாஸ்து முறையை பற்றி அறிமுகம் செய்க.
   3) “அஜந்தாவில் 17 வது குகையில் சிறப்பான பல விடயங்கள் ஓவியமாக்கப்பட்டுள்ளது”இக்கூற்றினை விமர்சிக்குக.

4- பல்லவரினால் கி..பி 7 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட மகாபலிபுரக் கலைபாணி பின் வந்த சோழர் காலம் வரை செல்வாக்கு செலுத்தியது.

   1) பல்லவர்களினால் உருவாக்கப்பட்ட இரதவடிவக் கோயில்கள் நான்கு தருக?
   2) தஞ்சப்பெருங்கோயில் சோழக்கட்டக்கலையின் பிரமாண்டத்தை எடுத்துக்காட்டும் விதத்தினை விமர்சிக்குக?
   3) “கங்கையின் இறக்கம்” என்ற படைப்புச்சிற்பத்தை அதன் கருப் பொருளுடனும் தொடர்புபடுத்தி மதிப்பிடுக.

## உப பகுதி ‘இ’

## (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

5- உரோமானிய வீழ்ச்சியை தொடர்ந்து எழுச்சி பெற்ற பைசாந்திய கலை வேலைப்பாடுகள் உரோமர் கலையிலும் வேறுபட்டு காணப்பட்டது.

(1) உரோமானிய சிலைகள் நான்கு தருக.

(2) மொசாய்க் சித்திரத்தின் அடிப்படை அம்சங்கள், அவை உருவாக்கப்படும் நுட்பமுறை என்பன பற்றி அறிமுகம் செய்க.

(3) சன்விட்டாலே ஆலயத்தில் காணப்படும் சிறப்பு வாய்ந்த ஓவியத்தை மதிப்பீடு செய்க.

6- கி.மு 3000 ஆண்டளவில் ஆரம்பித்த எகிப்தியக்கலை எகிப்தியருடைய அந்தரங்க வாழ்வின் அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றது.

1) எகிப்திய பாரம்பரிய இயல்புகளை எடுத்துக்காட்டும் இரு சிலைகளைக் குறிப்பிடுக.

2) எகிப்திய பாரம்பரியக் கலைப்பாங்கில் காணப்படும் நான்கு அடிப்படை இயல்புகளை எழுதுக,

3) பாரம்பரிய கலை நிர்மாணிப்புக்களினுள்ளே கட்டுண்டு இருந்த எகிப்திய சிற்பிகள் பின்னர் அவற்றினின்றும் விடுபட்டு இயற்கைச் சிற்பங்களை ஆக்கத் தூண்டப்பட்டனர் எனத்தெரிகின்றது இரு உதாரணங்களைக் கொண்டு விமர்சிக்க.

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | சித்திரக்கலை–II | மூன்றுமணித்தியாலங்கள் |
|---|---|---|

### அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டலும்

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **வரைதாளில் பின்புறத்தில் இடதுபக்க மேல் மூலையில் உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.**
- ❖ **விரும்பிய வர்ண ஊடகத்தை தனித்தோ அல்லது கலந்தோ பயன்படுத்த முடியும்.**
- ❖ **பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைய வேண்டும். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.**

நோக்கம்:-

*1)* இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.

*2)* இரேகையைப் பயன்படுத்திப் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்திரிக்கும் திறனையும் அளவிடுதல்.

*3)* வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

புள்ளி வழங்கும் நியதிகள்

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன். *(20 புள்ளிகள்)*
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். *(20 புள்ளிகள்)*
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன் (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்) *(20 புள்ளிகள்)*
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். *(20 புள்ளிகள்)*
5. சித்திரத்தின் பூரணப்பாடு. *(20 புள்ளிகள்)*

இப்பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்

மேற்பார்வையாளருக்குரியது

## சித்திரக்கலை - II

நிலைப் பொருட்கூட்ட வரைபு

(ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கூட்டம்)



பொருட்கள்

- ✶ பெட்டி
- ✶ துணி / துவாய்
- ✶ பூசணிக்காய் /தர்பூசணி (கால்வாசி வெட்டியகற்ற வேண்டும்)
- ✶ பானை
- ✶ பேணி
- ✶ பேப்பர் சுருள்
- ✶ தேமாக் கிளை பூவுடன்
- ✶ வட்டத் தட்டம்
- ✶ கிடைப்பலகை

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWCF

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | சித்திரக்கலை–III | மூன்றுமணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்

- ❖ **கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.**
- ❖ **உமது பரீட்சை சுட்டெண்ணையும் தெரிவு செய்த விரைவின் இலக்கத்தையும் தாளில் பின்புறத்தில் இடது பக்க மூலையில் தெளிவாக எழுதுக.**
- ❖ **விரும்பிய** வர்ண ஊடகம் (ஒன்றுக்கு மேற்பட்ட வர்ண **ஊடகங்கள் கலந்தும்) பயன்படுத்**தலாம்.

பகுதி - அ

படவாக்கம்

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும்** தெரிவு செய்க.

1) இறங்குதுறையும் மக்கள் கூட்டமும்
2) பஸ் வண்டிக்காக காத்திருக்கும் பயனிகள்
3) புத்தாண்டை முன்னிட்டு தெருவோரம் நடக்கும் வியாபாரம்.

பகுதி - ஆ

ஆக்க அலங்காரம்

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.**

4) பித்தளையில் உருவாக்கப்பட்ட வெற்றிலை தட்டம் ஒன்றிற்கான அலங்காரம்
5) 9''x 9'' அங்குல மாபிள் கல்லொன்றிற்கானஅலங்காரம்
6) கேத்திர கணித வடிவமைப்புகள் கொண்ட மேசை விரிப்பிற்கான அலங்காரம்

பகுதி - இ

கிறபிக் சித்திரம்

➢ **பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் தெரிவு செய்க.**

7) "நன்நீரினைப் பாதுகாப்போம்" சுவரொட்டி
8) பல்பொருள் அங்காடி ஒன்றிற்கான விளம்பரப் பலகை
9) "விடுகதைகள்" என்ற நூலுக்கான அட்டைப்படம்